கீதை — சொற்பொழிவுகள்



KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 6986
கோவிலூர் KOVILOOR MADALAYAM மடாலயம்
6986

பிரசுரிப்பவர்கள் :

கீதா ஞான யக்ஞக் கமிட்டி

மதுரை

CHINMAYA'S VOICE

			Rs.	As.	P.
1.	Isavasyopanishad (Eng.)	...	2	0	0
2.	" (Hindi)	...	1	0	0
3.	Kenopanishad ...	...	2	0	0
4.	Kathopanishad ...	...	5	0	0
5.	Prasnopanishad ...	...	2	0	0
6.	Mundakopanishad ...	...	2	0	0
7.	Mandukya and Karika	...	7	8	0
8.	Aitareyopanishad ...	...	3	0	0
9.	Taittiriyopanishad ...	...	4	0	0
10.	Isavasyopanishad (Tamil)	...	1	4	0
11.	Meditation and Life (Eng.)	...	2	0	0
12.	" (Hindi)	...	2	0	0
13.	Hinduism (Tamil) ...	...	0	4	0
14.	Vivekachudamani ...	...	2	0	0
15.	Talks with Aspirants	...	2	0	0

Available at:

144, Mount Road, MADRAS.

14-3

கீதை - சொற்பொழிவுகள்

10—8—56உ முதல் 19—8—56உ வரை

மதுரை ராஜாஜி விளையாட்டு மைதானத்தில்

நடைபெற்ற கீதா ஞான யக்ஞத்தில்

ஸ்வாமி சின்மயானந்தா அவர்கள்

நிகழ்த்திய

கீதை 12-ம் அத்தியாயம் (பக்தியோகம்)

உபந்நியாச சாரம்

1956

வெளியிடுவோர்:

கீதா ஞான யக்ஞக் கமிட்டி,

267, ராமனாதபுரம் ரஸ்தா :: மதுரை.

சுவாமிகளின் ஆங்கிலப் பிரசங்கங்களில் நிறைந்த
கருத்துக்களைத் தமிழில் மக்களுக்குத்தர
உதவிய பேராசிரியர்
ஸ்ரீ T. சேஷாத்திரி, M. A., B. O. L.

மதுரை
30—8—56

பு. கி. இராமாச்சாரி
காரியதரிசி.

19-3

கீதை 12-வது அத்தியாயம்.

பக்தி யோகம்.

உபாசனையும், பக்தியும்.

பக்தி என்பது உலகத்திற்கு வியாச பகவானுல் கண்ணன் மூலம் தரப்பட்ட ஒரு புது முறை, வழிபாட்டுத் தத்துவமாகும். கீதை ஏற்பட்ட காலத்திற்கு முன் இருந்த தெல்லாம் உபாசனை தான். உபாசனை என்பது தியானப் பொருளை தியானத்தின் மூலம் சாஸ்திர,குரு உபதேசங்களின் படி நெருங்கி அந்த ஒரே எண்ண ஓட்டத்தில் லயித்து நெடுங் காலம் தொடர்ந்து நிற்பது என்று பொருள்படும். அந்தக் காலங்களில் மனதிற்கும், புத்திக்கும் இவ்வளவு சலனம் ஏற் பட்டதில்லை. அக்காலத்துப் பெரியவர்களுக்குச் சிரமமின்றி மிக சூக்ஷ்மமான பொருள்களைக்கூட மனதிலே தரித்து நிற்க முடிந்தது. அதனுல் அவர்களுக்கு உருவம் குணமற்ற புலன் களுக்கு அப்பால் நின்ற சக்திகளையும் மனதில் தாங்கி உபாசனை செய்ய முடிந்தது. ஓம் என்ற பிரணவத்தில்கூட அவர்கள் மனம் லயிக்க முடிந்தது. ஆனுல் பின்னுல் அமைதி இழந்து சலனமுற்ற மனங்களுக்கு அந்த உபாசனை நிலை இயலாததாகிவிட்டது. ஆகவேதான் வியாச பகவான் உலகத்திற்கு பக்தி மார்க்கத்தை எடுத்துக்கொடுத்தார். இந்த மார்க்கத்தில் மனது அறிந்து ஏற்று இன்புற்று அதிலேயே நிலைத்து நிற்கக்கூடியதாக அந்த தெய்வத்தின் ஒரு திரு உருவம் தரப்படுகிறது. ஆகவே அர்ஜுனன் கேட்ட கேள்வி உபாசனையா, பக்தியா என்பதாகும்.

அர்ஜுனன் கேள்வி.

அர்ஜுன உவாச—

எவம் ஸததயுக்தா யே ப[4]க்தாஸ்த்வாம் பர்யுபாஸதே
யே சாப்யக்ஷர மவ்யக்தம்தேஷாம் கே யோக[3]வித்தமா : (1)

எப்பொழுதும் இடைவிடாமல் ஸ்திரமாக உன்னை பக்தி செய்கிறார்கள் சிலர். அவர்கள் நீ சொன்ன விதமே செய்கிறார்கள். உலகம் கிருஷ்ணமயம் என்று அறிந்து உலகத்தை வெறுக்காமல் உன்னையே எல்லையாக வைத்துக் கொண்டு பக்தி செய்கிறார்கள். சிலர் அழியாததும், புலன்களுக்குப் பிடிபடாததுமான அந்தத் தத்துவப்பொருளை உபாசிக்கிறார்கள். உபாசனைக்கும் பக்திக்கும் அடிப்படையில் மாறுபாடு கொஞ்சம்தான். உபாசனை ஞானபூர்வமானது. பக்தி உணர்ச்சிகளின் அடிப்படையைக் கொண்டது. மாறாது, சலனமில்லாது மிகவும் சூக்ஷ்மமான ஒரு கருத்தை மனதில் தரித்து ஞானத்தின் சாதனையால் செய்யப்படுவது உபாசனை. பக்தி கடவுளை நம் உணர்ச்சிகளான அன்பு, ஆனந்தம், பாசம் முதலியவைகள் தங்கி விளையாடக்கூடிய ஒரு பொருளாக ஏற்று பக்தி செய்வதாகும். கடவுளைத் தந்தையாகவோ, மகனாகவோ, மனைவியாகவோ, காதலனாகவோ, வேலைக்காரனாகவோ, முதலாளியாகவோ, தோழனாகவோ, தோழியாகவோ ஏற்று தீவிர அன்பு செய்யும் முறையை பக்தி என்று சொல்லுகின்றோம். அர்ஜுனன் கேட்பதெல்லாம் வியக்தமான பொருளை உபாசிப்பதா அல்லது அவ்யக்தமான பொருளை உபாசிப்பதா என்பதைப் பற்றியதுதான்.

செம்பில் கங்கை.

ஹிந்துக்களுக்கும், ஆரிய சமாஜிகளுக்கும் இது தான் வித்தியாசம். அவர்கள் உபாசனை முறைதான் சிறந்தது என்ற கருத்தைக் கொண்டவர்கள். அதனுல் உண்மைத் தத்துவத்தை அறிந்துகொள்ளாமல் பேசுவது சரியல்ல. அலகாபாத் அல்லது காசிக்குச் சென்ற ஒருவன் ஒரு சிறிய செம்பில் கங்கை நீரை அடைத்துக்கொண்டு வந்து சேருகிருன். அவன் தாயோ அல்லது பாட்டியோ இது என்ன என்று கேட்டால் தடங்கலில்லாமல் அவன் கங்கை என்று சொல்லி விடுகின்ருன். கிழவியானவள் கங்கை இந்த செம்பிற்குள் அடங்குமா என்று முரட்டுக் கேள்வி கேட்பதில்லை. கங்கையைக் கண்ட இன்பம் பெற்று கங்கையில் மூழ்கிய புனிதத் தன்மையும் பெறுகிருள். ஆகவே தோற்றங்களைப் பக்தி செய்த போதிலும் அதற்குப் பின்னுலுள்ள உண்மைதான் உபாசிக்கப்படுகிறது. இதை அறிந்துகொள்ளாமல் அநேகர் கோவில் எதற்கு, குளம் எதற்கு என்றெல்லாம் கேட்கிருர்கள். கோவில்களை ஆஸ்பத்திரிகளாக்குங்கள் என்று முழங்குகின்ருர்கள். பெரும் தத்துவத்தின் அடிப்படையாய் பல நாட்களாய்ப் பேரொளி தந்து பெருவாரி மக்களை உய்வித்துக் கொண்டிருக்கும் கோவில்கள், ஒரே நாளில் உபயோகமற்றவையாக ஆகிவிட்டனவென்ருல் அது நோக்குகின்றவர்களின் அறிவில்லாத் தன்மையைத் தான் குறிக்கும். ராமனும் கிருஷ்ணனும் நம்மை அறிவிலிகளாக ஆக்கிவிடவில்லை. பக்தியுடன் நன்னடத்தையும், தேச பக்தியும வலியுறுத்தப்பட்டே வந்திருக்கின்றன.

விதையில் மரம்.

அர்ஜுனன் அக்ஷரபிரம்மத்தை அவ்யக்தம் என்று சொல்லுகின்றான். அவ்யக்தம் என்றால் இந்திரியங்களுக்குப் புலன் ஆகாதது என்று பொருள். ஒரு விதைக்குள் மரம் இருக்கிறது என்பது உண்மை. ஏனென்றால் விதையைத் தகுதியான இடத்தில் நட்டு நீர் ஊற்றினால் மெல்ல மெல்ல மரம் வளர்ந்து வருவதைப் பார்க்கிறோம். ஆனால் அந்த விதைக்குள் நேரடியாக மரத்தைப் பார்க்க முடிவதில்லை. ஆகவே பார்க்கமுடியாத நிலையிலும் ஒன்று இருக்கிறது. அப்படிப்பட்ட பிரம்மத்தைத்தான் சிலர் உபாசிக்கிறார்கள். முடிவாக அர்ஜுனன் "இவ்விதம் எப்பொழுதும் உன்னிடத்தில் பொருந்திய மனதைக் கொண்டவர்களாக உன்னைச் சிலர் உபாசிக்கிறார்கள். அழியாத, புலனாகாத அந்த பிரம்மத்தை சிலர் உபாசிக்கிறார்கள். இவர்களில் சிறந்த யோகிகள் யார்?" என்று கேட்கிறான்.

ஸ்ரீ ப⁴க³வானுவாச—

மய்யாவேஸ்ய மனோ யே மாம் நித்யயுக்தா உபாஸதே
ஸ்ரத்³த⁴யா பரயோபேதா-ஸ்தே மே யுக்ததமா மதா: (2)

நித்ய யுக்தா:

கண்ணன் பதில் சொல்லுகிறார்: "என்னை யார் உபாசிக்கிறார்களோ அவர்கள் சிறந்தவர்கள். உருவத்தின் மேல் பூவையோ, பணத்தையோ வாரி எறிந்தால் மட்டும் போதாது. ஆனால் அடிப்படையில் நம்பிக்கை வேண்டும். எப்பொழுதும் அவருடைய பாதத்தில் மனது பொருந்தியிருக்க வேண்டும். அதாவது வெளியே திரிகின்ற இந்திரியங்கள் மூலம்

வெளியே சுற்றும் மனதை உள் இழுத்து (மய்யாவேச்ய) என்பால் நிறுத்தவேண்டும். உதாரணமாக ஒரு லேவாதேவிக்காரன் தன்னுடைய பணத்தைஎல்லாம் வெளியே கடனுக்குக் கொடுத்திருக்கிறார். அந்த நிலையில் ஒரு கடை ஆரம்பிக்கலாமென்று எண்ணுகிறார். அவர் கொடுத்திருக்கிற பணத்தை எல்லாம் மீண்டும் வசூலித்து அந்தக்கடையில் ஈடுபடுத்துவார். அதேபோல வெளியே செல்லுகின்ற மனதை உள்ளிழுத்து கண்ணன்பால் மனதைச் செலுத்தவேண்டும்.

சிரத்தையா

சிரத்தை, பக்தி என்ற இரண்டு சொற்களும் தப்புக் கருத்துக்களில் வழங்கி வருகின்றன. சங்கராச்சாரிய சுவாமிகள் பக்தியைப் பின் வருமாறு லக்ஷணம் கூறுகிறார். (ஸ்வஸ்வரூபானுஸந்தா[4]னம் பக்தி ரித்யபி[4]தீ[4]யதே.) பக்தி என்பது தன்னுடைய சொரூபத்தை இடைவிடாது அனுசந்தானம் அல்லது ஆராய்ச்சி செய்வதுதான். ஒருமுறை ராமா என்று சொல்லி விட்டதினல் அந்த நாள் முழுவதும் ராமன் உனக்கு வசப்பட்டவராக ஆகிவிடமாட்டார். என்றும் இடைவிடாத அன்பும் ஈடுபாடும் இருக்கவேண்டும். அதற்கேற்ற தியாக புத்தியும் இருக்கவேண்டும். பக்தியைச் சரியான முறையில் செய்யாத பக்தன் உலகினரின் வெறுப்பைத்தான் ஏற்றுக்கொள்ளுகிறான். கல்லடி வாங்கித்தரும் பக்தி பக்தியாகாது. உண்மை பக்தனின் உள்ளத்தில் அன்பின் உருவமான கிருஷ்ணன் வசிக்கிறார். பக்தனே கிருஷ்ணன் ஆகிவிடுகிறான். அதேபோல சிரத்தை என்ற சொல்லுக்கும் உண்மைப் பொருள் தெரிந்துகொள்ளவேண்டும். சந்தியாவந்தன மந்திரத்திற்குப் பொருள் தெரியவேண்டுகின்ற அறிவாளிகளைக் கூட சிரத்தை இல்லாத பாவிகள் என்று அழைத்துவிடுகின்றனர்

லர். சங்கராச்சாரிய சுவாமிகள் 'சாஸ்த்ரஸ்ய குருவாக்யஸ்ய ஸமபுத்தய' என்று சிரத்தையை விவரிக்கிருர். சாஸ்திரம், குருவாக்கியம் இவைகளின் உண்மையை புத்தி அறிந்து ஏற்றுக்கொள்வதுதான் சிரத்தையாகும். மீண்டும் "எதனுல் வஸ்து அடையப்படுகிறதோ அதுவே சிரத்தை என்று சொல்லுவார்கள்." அந்தக் கருத்தில் சிரத்தையுடையவர்களாக மனதை என்பால் நிறுத்தி யார். என்றும் தொடர்ந்துஎன்னை உபாசிக்கின்ருர்களோ அவர்கள் சிறந்தவர்கள் என்பது என் கருத்து" என்று கிருஷ்ணன் சொல்லுகின்ருர்.

மதா: கிருஷ்ணன் 'மதாஹ' என்ற சொல்லை உபயோகப்படுத்துகின்ருர். மதத்திற்கும் தர்மத்திற்கும் வித்தியாசம் உண்டு. ஹிந்து தர்மத்தை சநாதன தர்மம் என்று அழைக்கின்ருேம். ஏனென்ருல் தர்மம் என்பது ஒரு பொருளின் மாருத அடிப்படைக் குணமாகும். எந்த ஒரு குணத்தினுல் அந்த வஸ்து அந்தப் பொருளாக நிற்கிறதோ, எந்தக் குணத்தை (தன்மையை) இழந்தால் அந்தப் பொருள் அந்தப் பொருளாக இருக்க முடியாதோ அந்தத் தன்மையை அந்தப் பொருளின் தர்மம் என்று சொல்லுகிருேம். உதாரணமாக, நெருப்பு சூட்டை இழந்தால் கரிக்கட்டையாகிவிடும். இனிப்பு நீங்கிய சர்க்கரை சர்க்கரையாகாது. நெருப்புக்குச் சூடுதான் தர்மம். சர்க்கரைக்கு இனிப்புதான் தர்மம். அதேபோல நம்முள் உள்ளே ஒளிகொண்டு விளங்கும் ஆதார சொரூபம் தான் ஹிந்துவினுடைய தர்மம். அந்தத் தெய்வ உண்மை மாருத அடிப்படைத் தத்துவம். எது இல்லாமல் புத்தி செயல் படாதோ, எதைக்கொண்டு அது செயல்படுகிறதோ, அது தான் நம் லக்ஷியம். இந்த லக்ஷியம் எல்லா உயிர்களிலும் இருக்கிறது. அது என்றும் உண்மை. அதனுல் இது சநாதன

தர்மம் என்று அழைக்கப்படுகிறது. கிருஸ்து, முகம்மது, புத்தபிரான், மஹாவீரர், குருநானக், மோஸஸ் போன்ற மஹான்களெல்லம் அந்தந்த உலக சமூக நிலையில் இந்த உண்மையே வாழ்க்கையில் விளங்குமாறு வாழ்க்கையை அமைத்துக் கொடுத்தார்கள். அவை மதங்கள் என்று அழைக்கப்பட்டன. உண்மையில் ஹிந்து தர்மம், அவற்றிற் கெல்லாம், உண்மைக் கோயிலுக்கு அஸ்திவாரம். அதன் மேல்தான் பற்பல மண்டபங்கள் எழுப்பப்படுகின்றன. எல்லோரும் அவற்றில் தங்கலாம். இந்த அஸ்திவாரத்தை மறுப்பவர்கள் கட்டும் மண்டபங்கள் ஆகாயத்தில் நிற்பவை யாகிவிடும். அந்த நிலையில் அடிப்படை ஒளியைக் கொண்டது சநாதன தர்மம். இது மாறாது. ஆனால் மதங்கள் மாறக் கூடியவை. கிருஷ்ணன் அதனால்தான் இது என் மதம் என்று சொல்லுகின்றார்.

அடுத்து கண்ணன் நிர்குண உபாசகர்களைப் பற்றிப் பேசுகிறார்.

யே த்வக்ஷரமநிர்தே[3]ஸ்ய மவ்யக்தம் பர்யுபாஸதே
ஸர்வத்ரக[3]மசிந்த்யம் ச கூடஸ்த[2]மசலம் த்[4]ருவம் (3)

அக்ஷரம்: அழியாதது என்று பொருள். உடலும், மனதும், புத்தியும் மாற்றங்களை இயக்கவல்லன. ஏற்கின்றன. ஆகவே அவை அழியும் தன்மையுடையவை. அழியாதது ஆத்மா தான், அந்த சூக்ஷ்ம பேரொளிதான், உண்மைத் தத்துவம் தான், ஆதார சக்தி தான்.

அனிர்தேஷ்யம்: அது லக்ஷணம் கூறப்படாதது. லக்ஷணத்தையே வார்த்தைகளால் முற்றிலும் திருப்தி அளிக்

கும் வகையில் லக்ஷணம் கூறமுடிவதில்லை. வார்த்தைகளால் சுட்டிக் காட்ட முடியாத அந்த ஆதார உணர்வொளியை அனிர்தேஷ்யம் என்று கூறுகின்றார்.

அவ்யக்தம்: வார்த்தைகள் சுட்டிக்காட்ட முடியாதென்றால் அந்தப் பொருள் இந்திரியங்களுக்குப் புலனாகப் போவதுமில்லை. ஆகவே அது மறைபொருள் என்று குறிக்கப்படுகின்றது.

சர்வத்ரகம்: எங்கும் நிறைந்தது.

அசின்த்யம்: உடலுடன் சம்பந்தப்பட்டதைத் தான் எண்ணிப் பார்க்க முடியும். அவ்யக்தம், அனிர்தேஷ்யம் முதலிய குணங்களைக் கொண்டிருந்தாலும் யோசிக்கப்படக் கூடியதாக இருக்கலாம். அடிபட்ட வலி யோசிக்கக்கூடியது. ஆனால் இது யோசிக்கவும் முடியாதது.

கூடஸ்தம்: கொல்லனின் பட்டறை போன்றது. கொல்லனின் பட்டறை இரும்பின் பல உருவங்கள் ஏற்படுவதற்குக் காரணமாய் அடிகள் தாங்கி நின்றபோதிலும் தான் மாறுவதில்லை. அதேபோல் அந்தப் பிரம்மமும் உலகத் தோற்றங்களுக்கு மாறாது. ஆனால் மாற்றங்களுக்கெல்லாம் அடிப்படையாய் நிற்கிறது.

அசலம்: அசைவற்றது. ஒரு பொருள் தான் இல்லாத இடத்திற்குத்தான் அசைந்து செல்ல முடியும். எங்கும் நிறைந்தது எப்படி அசைய முடியும்? ஆகவே எங்கும் நிறைந்து எல்லையற்றதாய் இருக்கும் அந்தப் பொருள் அசைவற்றதாகவுமிருக்கிறது.

துருவம்: சாஸ்வதமானது.

என்று இவ்வாறாகப் பிரம்மத்தின் லக்ஷணங்களை விவரிக்கிறார்.

பனிரெண்டாவது அத்தியாயத்தின் முக்கியக் கருத்து

பன்னிரெண்டாவது அத்தியாயம் பக்தியோகத்தைப் பற்றிப் பேசினாலும் இரண்டு சுலோகங்கள்தான் சுத்த ஆன்மப் பொருளைப்பற்றி கூறுகின்றன. "சகுண பக்தியோ, நிர்குண உபாசனையோ இரண்டினாலும் யோகி என்னை அடையலாம்" என்று சொல்லுகின்ற கருத்தைத் தவிர மற்றதெல்லாம் புற உலகுடன் இயைந்தது. செய்கைகள் எவ்வாறு இருக்க வேண்டும், மனப்பாங்கு எவ்விதம் அமையவேண்டும், புத்தியில் எவ்வித ஒளி இருக்கவேண்டும் என்ற கருத்துக்கள் நன்ருக விளக்கப்படுகின்றன. மிகவும் கவனித்து உறுதியாக முயற்சி செய்து அந்த மூன்று கரணங்களையும் தெய்வ வழிப் படுத்தவே கற்பிக்கப்படுகிறது.

ஸந்நியம்யேந்த்[3]ரியக்[3]ராமம் ஸர்வத்ர ஸமபு[3]த்[3]த[4]ய:
தே ப்ராப்னுவந்தி மாமேவ ஸர்வபூ[4]தஹிதே ரதா: (4)

மூன்ருவது சுலோகத்தில் அக்ஷரம், அனிர்தேஷ்யம் முதலிய குணங்களைக்கொண்ட தத்துவத்தின் உண்மை லக்ஷணம் கூறப்படுகின்றது. அந்த லக்ஷணத்தின், அந்தத் தத்துவத்தின் உபாசனைக்காக உதவும் படிகள் இங்கே கூறப்படுகின்றன.

இந்திரியக் கிராமம் சம்யம்ய: இந்திரியத் தொகுதிகளை அடக்கி - இந்திரியங்களால்தான் மனது சலனமடைகிறது. 'இந்திரியக் கிராமம்' என்ருல் இந்திரியங்களின் கூட்டம் அல்லது தொகுதியாம். மனது ஒன்றி புத்தகம் படித்துக் கொண்டிருக்கும் ஒருவன் மூக்கிலே பப்படம் பொறிக்கப் படும் வாசனை வந்து தாக்கினல் அவன் மனது பரபரப்பு அடைந்து, வயிறு சாப்பிடுவதற்குத் தூண்ட, படிப்பை

நிறுத்திவிடுகிறான். ஆகவே தான் இந்திரியங்கள் அடக்கப்பட வேண்டும். அந்த நிலையில் ஒரு இந்திரியத்தை மட்டும் அடக்கினால் போதாது. கண், காது, வாய், மூக்கு, தோல் எல்லாவற்றினுடைய போக்கும் நன்றாகக் கட்டுப்படுத்தப் படவேண்டும்.

சர்வத்ர சமபுத்தய: எல்லா இடத்திலும் சமமான புத்தி நிலையைக் கொண்டவர்களாக இருக்கவேண்டும். நிலை மாற்ற, இடமாற்றங்கள் மனதின் பரபரப்பற்ற தன்மையை அமைந்த நிலையை மாற்றிவிடக்கூடாது.

சர்வபூதஹிதேரதா: எல்லா உயிர்களுக்கும் ஹிதம் அல்லது நன்மை செய்வதிலே ஈடுபட்டவர்களாக இருக்க வேண்டும். அப்படிச் செய்கின்றவர்கள் "மாமேவப் பிராப்னு வந்தி" என்னையே அடைகிறார்கள். இங்கே 'என்னை' என்று ரோஹிணி பெற்று, யசோதை வளர்த்த, கோபியர்களின் நண்பனான கண்ணனை மட்டும் குறிக்கவில்லை. அப்படியிருந்தால் இன்று தான் அந்தக் கண்ணன் இல்லையே என்று கீதை வாழ்வு வாழும் முயற்சியை நிறுத்திவிடுவார்கள். கிருஷ்ணன் என்பது நம்முள்ளேயே உள்ள உயர்ந்த அத்யாத்மிக அறிவு. அதை நாம் அடையலாம் என்பது பொருள். மற்றப்படி கிருஷ்ணன், புத்தகம், சத்சங்கம், குரு எல்லாம் நிமித்தங்கள் தான்.

ஆகவே இங்கே மூன்று நிபந்தனைகள் தரப்படுகின்றன. அவைகள் ஏதோ அதிகாரத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு இஷ்டம்போல் தரப்பட்ட விதிகளல்ல. இந்திரியங்களை அடக்குவது தமம் என்று கூறப்படுகிறது. இந்திரியங்களின் மூலமாகத் தான் மனது பாதிக்கப்படுகிறது என்பது

R65.6

உண்மை. அங்கு மனதும் இருவகையிலே அனர்த்தம் செய்கின்றது. அந்த இருவகை அனர்த்தத்திற்கும் புலன்களே வாயில்கள். வெளிப்பொருள்களின் உணர்வுகள் புலன்களாகிற வாயில்களின் வழியே உள்ளே சென்று மனதைத் தாக்குகின்றன. எதிரே பொருள் இல்லாதபோதும் மனதானது அந்தந்தப் பொறி வாயில்களின் வழியே சென்று வெளிப்பொருள்களைக் கற்பனை செய்து அவைகளின் மேல் மொய்த்து இன்பம் அடைகின்றது. இந்த இரு வழிகளிலும் அதாவது புறப்பொருள் உணர்வுகள் வந்து தாக்கும்பொழுதும் மனது தானே வெளியே சென்று பொருள்களின் மேல் மொய்க்கும் பொழுதும் அது சலனமுறுகிறது. இதை அடக்கத்தான் புலனடக்கம் முதல் நிபந்தனை. இரண்டாவது நிபந்தனை எல்லாவிடத்திலும் சமபுத்தியுடையவனாயிருத்தல். சமநிலை மாறினால் வீணில் குரோதமோ அர்த்தமற்ற [illegible] அன்போ ஏற்பட ஏதுவாகிறது. நம் நண்பனே நமக்கு விரோதியாக ஆகிவிடமுடியும். ஆனால் சமநிலையில் வைத்திருந்தால் அது உற்ற நண்பனாக இருக்கமுடியும். மூன்றாவது நிபந்தனை உலக நன்மையில் ஈடுபடுதல். மனது, புத்தி இரண்டும் இருக்க வேண்டிய நிலையைக் கூறிய பிறகு உடல் என்ன செய்ய வேண்டும் என்று கூறுவது தேவையாகிறது. ஆகவே தான் எல்லா உயிர்களுக்கும் நன்மை செய்வதிலும் ஈடுபட்டிருக்க வேண்டும் என்று கூறப்படுகிறது. சகுணப் பிரம்மத்தின் உபாசனைக்கு இந்தக் கஷ்டமான நிபந்தனைகள் தேவையில்லை. ஆனால் மிக சூக்ஷ்மமான இந்த நிர்குணப் பிரம்ம உபாசனைக்கு இவ்வளவு நிபந்தனைகள் தேவையாகின்றன.

க்லேஸோSதி[4]கதரஸ்தேஷாம் அவ்யக்தாஸக்தசேதஸாம்
அவ்யக்தா ஹி க[3]திர்து[3]:க[2]ம் தே[3]ஹவத்[3]பி[4]ரவாப்யதே 5

இந்த இரண்டு முறைகளில் நிர்குணப்பிரம்ம உபாசனை அதிகக் கஷ்டமானது. மதுரையிலிருந்து மோட்டாரில் திருப்பரங்குன்றம் போவது நல்லதுதான். ஆனால் சைக்கிள் மட்டும் வைத்திருப்பவன் அதிலேயே திருப்பரங்குன்றம் போவதுதான் எளிது. "பாதாம்கீர்" பால் பாயஸம் கிடைக்காத சமயத்தில், பசித்தவன் அதற்குக் காத்து ஏங்கியிராமல் கிடைத்த உப்புமாவைத் தின்று பசி அடங்குவது தான் எளிது, நல்லதுங்கூட. அந்த நிலையில் தான், இடம் பொருள் ஏவல்களின் நிலையை அனுசரித்து, ஒத்திட்ட நிலையில்தான் சகுண உபாசனை சுலபம் என்றும், நிர்குண உபாசனை கஷ்டம் என்றும் சொல்லப்படுகின்றது. அதை மட்டும் தனியே எடுத்துப் பேசப்படவில்லை.

அவ்வியக்தாசக்தசேதஸாம்: நிர்குணப்பிரம்மத்தில் ஈடுபட்ட மனதையுடையவர்களான தேஷாம்; அவர்களுக்கு கிலேச: கஷ்டம், அதிகதர: அதிகம் தேகவத்பி: தேகஅபிமானிகளுக்கு அவ்வியக்தாகதி: நிர்குண பிரம்ம உபாசனை முறை துக்ஹம் அவாப்யதே: கஷ்டத்தைத் தருகிறது.

திடீரென்று பெயர், தோற்றம், குணம், நிலை ஒன்றும் தெரியாத ஒரு பொருளைபபற்றிச் சொன்னால் அதை மனதில் ஏற்று அதனுடன் ஒன்றுதல் கஷ்டம். நிர்க்குணத்திற்கு மாறாக ஒரு சிறிய அழகான பையன், கொண்டல் வண்ணன், கமலக் கண்ணன், குழலூதும் வாயன், அழகன், இனியன் என்ற முறையில் ஒரு உருவம் தரப்பட்டால் அந்த உருவத்தை மனதில் ஏற்றுக்கொண்டு நம்முடைய உணர்ச்சியை அதன் பால் செலுத்தி பக்தி செய்வது சுலபம்.

இந்த சுலோகத்தில் சாதனையின் கடுமை, எளிமையை உத்தேசித்து ஒன்று மற்றதைவிடக் கஷ்டம் என்று சொல்லப் படுகிறது.

யே து ஸர்வாணி கர்மாணி மயி ஸங்ந்யஸ்ய மத்பரா:
அனன்யேனைவ யோகே[3]ன மாம் த்[4]யாயந்த உபாஸதே (6)

இந்த சுலோகத்தில் சகுணபக்தர்களுக்கான நிபந்தனைகள் சொல்லப்படுகின்றன.

சர்வாணி கர்மாணி மயிசந்ந்யஸ்ய: செய்யும் எல்லாத் தொழில்களையும் என்னிடத்தில் ஒப்புவித்து........ இது தேவலேயே என்று எண்ணலாம். திருடுகின்றவன், கொலை செய்கின்றவனும்கூட கண்ணனிடத்தில் செயல்களை ஒப்புவித்துவிட்டால் புண்ணியமாகிவிடுமோ என்று கேட்கலாம். அன்பளிப்பாக இந்தியாவின் ராஷ்ட்ரபதியின் படத்தை எழுதி அவருக்கு அளிக்கவேண்டும் என அன்பாசைகொண்ட ஒரு ஓவியன் அந்தப் படத்தை எழுதுவதற்கும், பணத்திற்காக மட்டும் அவனே வேருெருவருடைய படத்தை எழுதுவதற்கும் எவ்வளவோ வேறுபாடு உண்டு. குருசந்நிதானத்தில் குரு பக்தியால் பாடும் பாடகன் பணம் வாங்கி கச்சேரி செய்யும் பந்தலில் அவ்விதம் பாடமாட்டான். முன்னதில் அன்பும் நன்றியும் அந்த ஆக்கத்துக்கு ஒரு புனிதத் தன்மையை அளித்துவிடுகின்றன. வாசலில் ஐஸ் விற்பவன் நாம் கொடுக்கும் காசை நல்லது தானு என்று திருப்பித் திருப்பிப் பார்ப்பதற்குக் காரணம் அவன் முதலாளி, கெட்ட காசை ஏற்றுக்கொள்ள மாட்டானே என்பதற்காகத்தான். இந்த உதாரணங்களைப்போல பகவானுக்கு அர்ப்பணம் செய்யவேண்டும், என்ற நிலையில் செயலாற்றும் மனிதன்

கெட்ட செயல்களைச் செய்யவேமாட்டான். அன்பு அடிப்படையாய் இருப்பதினாலே தானாகவே செயல்களும் புனிதமாகி விடும்.

மத்பரா: என்னையே லக்ஷியமாகக்கொண்டு........ என்னையே என்பது நம்முள்ளேயே உள்ள செயல்கள் தூய்மையடைந்ததால் மனதும், புத்தியும் மலம் நீங்கிப் புனித ஒளி பெற்று அப்பொழுது கிடைக்கும் உயர்ந்த அத்யாத்மிக நிலையைக் குறிக்கும். பணம், பொருள் மற்ற வசதிகளை லக்ஷியமாகக் கொள்ளாமல் அந்தப்பர நிலையையே லக்ஷியமாகக் கொள்ளவேண்டும்.

அனன்யேனைவ யோகேன: லக்ஷியமும் மாறக்கூடாது. நிரம்பப் படித்துப் பெரிய வேலை பெறவேண்டும் என்று ஆரம்பித்த இளைஞன் கஷ்டம் எதிர்ப்பட எதிர்ப்பட லக்ஷியத்தை மாற்றிக்கொண்டு சாதாரண ஒரு வேலையுடன் திருப்தி அடைந்துவிடுவது போல, மனிதன் மாற்றம் கொண்டிருக்கக்கூடாது. இதில் இரண்டு கருத்துக்கள் உண்டு. ஒன்று எடுத்துக் கொள்ளப்படும் லக்ஷியத்தைப் பற்றியது. எதை நோக்கி நாம் போகிறோமோ, அது புற லக்ஷியம். அதுவும் மாறக்கூடாது. அதை நோக்கிச் செல்லும் நம் மனதிலும் மாற்றம் ஏற்படக்கூடாது. அது அனன்யயோகமாகும்.

தியாயந்த: தியானம் செய்கிறார்கள். உபாசதே: உபாசிக்கிறார்கள். சகுண உபாசகர்கள் எந்தவிதமாகப் பக்தி செய்ய வேண்டும் என்று இதில் கூறப்பட்டிருக்கிறது. செயல்களைக் கண்ணனுக்கு அர்ப்பணித்துவிட்டு அவனையே லக்ஷியமாகக் கொண்டு இரண்டற்ற ஒன்றேயான ஈடுபாட்டுடன் இடையறாது பக்தி செய்கிறார்கள் அவர்கள்.

தேஷாமஹம் ஸமுத்[3]த[4]ர்தா ம்ருத்யுஸம்ஸாரஸாக[3]ராத்
ப[4]வாமி நசிராத்பார்த[2] மய்யாவேஸிதசேதஸாம் (7)

அப்படிச் செய்கின்றவர்களை நான் காப்பாற்றுகின்றேன் என்று கண்ணன் இதில் சொல்லுகின்றார். கிறிஸ்துவ மதத்தில் மட்டுமல்ல, முஸ்லிம் மதத்தில் மட்டுமல்ல, ஹிந்து மதத்திலும் கூடப் பகவான் நான் காப்பாற்றுகின்றேன் என்று சொல்லுகின்றார்.

மிருத்யு சம்சாரஸாகராத்: சாவின் சம்சாரக் கடலிலிருந்து என்று பொருள். சம்சாரம் என்றால் போவது வருவது என்று பொருள். மனிதன் பிறப்பது இறப்பதை மட்டும் இது குறிக்கவில்லை. நம்முடைய மனதைச் சலனமடையச் செய்யும் ஒவ்வொரு கருத்துக்கும் பிறப்பு இறப்பு உண்டு. அப்படிப்பட்ட சம்சாரத்தினுள் அழுந்துவதிலிருந்து "காப்பாற்றுகிறேன்" என்று பொருள். கடல் என்றால் அடங்காத அலையும், இறங்கிக் கரையேற முடியாத ஆழ அகலமும் கொண்ட ஒரு பொருள் என்ற நுட்பக் கருத்தில்தான் இது ஆளப்பட்டிருக்கிறது. இந்த சாகரத்திலிருந்து மய்யாவேசித சேதஸாம்: என்னிடத்தில் ஈடுபடுத்தின மனதையுடையவர்களான தேஷாம் அவர்களை, அகம் நான், சமுத்தர்தா தூக்கிவிடுகின்றவனாக பவாமி: ஆகிறேன்.

கண்ணன் நான் காப்பாற்றுகிறேன் என்று சொல்லுகின்றார். ஆனால் எவ்வளவு நாட்களில்? குறிப்பாக நேரத்தைக் கணக்கிடாமல் "அதிக நாள் ஆகாது" நசிராத் என்று மட்டும் சொல்லுகிறார். சாதனை செய்பவன் குறிப்பிட்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்து சரியான வழியில் சென்றானானால் தக்க தருணத்தில் உடனே இந்த சம்சார சாகரத்தில் மூழ்குவதி

லிருந்து அவன் காப்பாற்றப்படுகிறான். கண்ணன்பால் மனதை திருத்தி செயல்களை நல்லவையாகச் செய்து அவனுக்கு அர்ப்பணித்து மாறாத ஈடுபாட்டுடன் அவனை நோக்கி நடந்தால் அவன் உடனே காப்பாற்றுகிறான் என்று பொருள்.

இங்கே "நான்" என்பது யார்? அது நம்முள்ளே இருக்கின்ற அந்த உயர்ந்த ஆன்ம ஒளிதான். மனது சிறந்தால் அவனும் சிறப்படைகிறான். மனதின் போக்குப்படி தான் அல்லது அதன் நிலைக்கேற்றவாறு தான், மனிதனும் அமைகிறான். நான் சிரடைவேன் என்று திண்ணம் கொண்டவன் சிரடைகிறான். நான் எப்படி வாழ்வேன் என்று மனது இடிகிறவன் இடிந்தேதான் போகிறான். அர்ஜுனன் சண்டைக்குப் போய்க்கொண்டிருந்தவன்; அவனை "நீ உய்யக் கோவிலுக்குப் போ" என்று கண்ணன் சொல்லவில்லை. சண்டை செய்துகொண்டே சண்டையின் முன் பின், லாப நஷ்டம், காரணகாரியம் முதலியவைகளைப்பற்றிய உன் மனோ நிலையை மாற்றினால் உன் மனச்சலனம் நீங்கி கெட்ட செய்கையும் நல்ல பலனுடையதாக ஆகி, ஆன்ம ஒளி வெளியாகும் என்று சொன்னார்.

பக்தியும், ஞானமும் அரைகுறையாக அமையக் கூடாது. அதன் முழுப்பொருள் கண்ணன் வாயிலாக உணர்த்தப்பட்டிருக்கிறது.

முதல் சுலோகத்தில் அர்ஜுனன் நிர்க்குண உபாசனை செய்யவா, சகுண பக்தி செய்யவா என்று கேட்கின்றான். கிருஷ்ணன் அதற்கு இரண்டு வழிகளில் போகின்றவர்களும் என்னை அடைகிறார்கள். ஆனால் இரண்டிற்கும் நிபந்தனைகள்

உண்டு. செய்கைகள், மனம், புத்தி மூன்றும் பரமாத்ம மயமாக ஆகவேண்டும். இவைகளில் ஏதாவது ஒன்றினால் மட்டும் நல்லவர்களாய் இருந்து மற்ற வகையில் கெட்டவர்களாய் இருந்தால் அது தற்காலப் படிப்புபோல் பயனற்றதாக ஆகிவிடும். எந்தஇடத்திலும்பண்பாட்டுடன் நடந்துகொள்ளப் பழகாத படிப்பு வெறும் எட்டுச் சுரைக்காய்களைச் சேர்ப்பதாகும். நாஸ்திகர்களாவது உடல், மனம், புத்தி மூன்றிலும் ஒரே மாதிரியான வளர்ச்சியுடைய ராக்ஷசத் தன்மையுடையவர்களாக இருப்பதால் அவர்களுக்கு ஒரு அகவழகு கிடைத்துவிடுகிறது. ஆனால் ஒரு பகுதி ஆஸ்திகமுடைய சரியான அளவைக் கொண்டு பல அங்க வளர்ச்சிகள் ஏற்படாத காரணத்தினால் தாமும் அழகு கெட்டுப் பிறரும் வெறுக்கும் வண்ணமாகிவிடுகிறார்கள்.இந்தப் பகுதி வளர்ச்சி உடம்பில் புண் போன்றது. ஒரு மணி நேரம் தெய்வ வாழ்க்கையும் இருபத்திமூன்று மணி நேரம் பேய் வாழ்க்கையும் அல்லது மனதால் நல்ல வாழ்க்கையும், செய்கைகளால் அரக்க வாழ்க்கையும் என்றிருந்தால் ஒரு பயனும் ஏற்படாது. ஒளி வந்தால் இருள் தொலையவேண்டும் என்று இவ்விதம் கிருஷ்ணன் சொல்ல, அர்ஜுனன் அதற்கு அனுகுணமாக பக்திசெய்ய ஆவலுறுகிறான். பிறகு எந்த வகையில் பக்தி செய்யலாம் என்று கேட்கிறான். அதற்கும் பதில் கிடைத்த பிறகு, நான் எப்படி ஆரம்பிக்கிறது என்று கேட்கிறான்.

மய்யேவ மனஆத[4]த்ஸ்வ மயி பு[3]த்[3]தி[4]ம் நிவேஶய
நிவஸிஷ்யஸி மய்யேவ அத ஊர்த்[4]வம் ந ஸம்ஶய: (8)

மய்யேவ மன ஆதத்ஸ்வ: கிருஷ்ணன் பதில் சொல்லுகிறார், 'என்னிடத்திலே மனதை நிறுத்து'. என்னிடத்திலே

என்பதற்கு மனிதனின் உள்ளே மறைந்து நின்று ஒளிவீசும் ஆன்மாவேயாகும். அவனுடைய பிரகிருதியின் மேல்படியாகும். மனிதனை அவன் மட்ட உணர்ச்சிகள் கீழே இழுக்கின்றன. அவன் மனதை எப்பொழுதும் அந்த உயர்ந்த உணர்ச்சிகளின் ஆதார தத்துவத்தில் நிறுத்தி வைத்திருக்கவேண்டும்.

மயிபுத்திம் நிவேஸய: புத்தியை அதற்குள்ளே செலுத்திவிடவேண்டும். மனம், புத்தி என்கின்ற இந்த இரண்டு அம்சங்களைக் கொண்ட அந்த இயந்திரம் கிருஷ்ண அச்சைக் கொண்டு இயங்கவேண்டும். இப்படிப் பழக்கப்பட்ட மனது புத்திக்கேற்றவாறுதான் மனிதனுடைய பண்புகள் அமையும். மனிதனுடைய பண்புக்கேற்றவாறு தான் அவன் வசிக்கின்ற தேசத்தின் பொதுப்பண்பு அமையும். ஒரு துணியின் ஊடு, பாவு நற்சேர்க்கையைத் துணி நிலையில் மாற்றிவிடமுடியாது. பஞ்சு நிலையிலிருந்து, நூல் நிலை வழியாக நெய்யும் நிலை வரையில் நல்ல சாதனங்கள் இருந்தால் தான் துணியும் நன்றாய் அமையும். அதேபோல தேசத்தின் பண்பாடும் தனி மனிதனுடைய புத்தி, மனதின் பழக்கத்தை ஆதாரமாகக் கொண்டு மனிதனுடைய பண்புகள் மூலம் வளர்ந்து சமூகப் பண்ப சிறந்ததாக அமைய வேண்டும். ஆகவே முதலில் புத்தியை தெய்வ ஒளி கொண்டதாக மாற்றிக்கொள். பிறகு மனதை அந்தப் பரிபூரண நிலையான தெய்வ ஒளியின்பால் நிறுத்து. அந்த நிலையில் உன் செயல்களும் தெய்வீகமடையும். எப்படி வெளிச்சத்தின் அடியில் வந்தவன் என்ன நிறம் கொண்டிருந்தாலும், அந்த வெளிச்சத்தின் ஒளியில் மூழ்கி அந்த ஒளிமயமாக ஆகிறானோ, அதே போல புத்தியில் தெய்வ ஒளி ஏற்றி மனதை அந்தத் தத்துவத்தில் நிறுத்தியவனுடைய செய்கைகளும் அந்த ஒளி மயமாக மாறிவிடும். அதாவது முதல்படியாக புத்தியை அந்தப் பரிபூரண ஆன்மீக

தெய்வ ஒளி மயமாக மாற்றிவிடு. மனதை அந்தத் தத்துவத்தில் பொருத்திவிடு. அப்படியானால் என்ன ஆகும்?

தஞ்சாவூரிலிருந்து வழிகேட்டுக் கொண்டு வருபவன் குறிப்பிட்ட தூரத்தையும், குறிப்பிட்ட நேரத்தையும் தாண்டிய பிறகு என்ன ஆகும்? அவன் குறிப்பிட்ட ஊருக்கு வந்து சேருவான். அதற்குப் பிறகு? அவன் அந்த ஊரிலேயே இருப்பான். இதேபோல அதஊர்த்துவம் அதற்கு மேலே, மையேவ நிவஸிஷ்யதி என்னிலேயே வசிக்கிறாய். திட்டமிட்டு திட்டப்படி செய்த காரியம் பலிக்கிறது. உலகில் சாதாரணமான ஒரு காரியம் கூட இந்த முறையில் தான் சித்தியாகிறது. புது வீடு கட்டவேண்டும் என்ற ஒரு ஆசை ஒளி புத்தியில் எழுகிறது. மனது அதன் தத்துவத்தில் ஈடுபடுகிறது. அதன் காரணமாக அந்த எல்லைக்கு அழைத்துச் செல்லும் செயல்கள் திட்டமிடப்படுகின்றன. திட்டங்கள் நிறைவேற காரியம் சித்தியாகி மனிதன் வீட்டைப் பெறுகிறான். நஸம்சய: இதில் சந்தேகம் இல்லை. வெகு சுலபமான வழி. புத்தியில் ஆன்ம ஒளி ஏற்றி வைக்கவேண்டும். மனது அந்தத் தத்துவத்தில் ஈடுபட்டிருக்க வேண்டும். மனிதன் அந்த நிலையை அடைகிறான். "இவ்வளவுசுலபம்தானா? உலகைத்துறந்து மெய்வருத்திப் பலகாலம் கடுந்தவம் செய்து அல்லவா அந்த நிலையை அடையவேண்டும் என்று கேள்விப் பட்டிருக்கிறோம்" என்று அர்ஜுனன் சந்தேகித்திருப்பான் போலும்! அதையறிந்த கிருஷ்ணன் சந்தேகமேயில்லை என்று தைரியமாகச் சொல்லுகிறார். இந்த முறையும் அவ்வளவு எளிதல்ல. புல்லாங்குழலில் அழகிய நாதம் எழுப்பக் குழலூத அறிந்தவன் கஷ்டப்படுவதில்லை. ஆனால் புதிதாகக் கற்றுக் கொள்ளுபவன் ஊதி ஊதி வாய் வெடித்தாலும் நல்ல நாதம்

எழுவதில்லை. அதேபோலக் கிருஷ்ணன் சந்தேகமில்லைஎன்று சொன்னபோதிலும் இந்த வழி சாத்தியமாவதாகத் தோன்றவில்லை. ஆகவே அடுத்த வழி சொல்லுகிறார்.

அத²சித்தம் ஸமாதா⁴தும் ந ஸக்னோஷி மயி ஸ்தி²ரம்
அப்⁴யாஸயோகே³ன ததோ மாமிச்சா²ப்தும் த⁴னஞ்ஜய (9)

அத-பிறகு, மயி-என்னில், ஸ்திரம்-அசையாமல், சித்தம்-சித்தத்தை, சமாதாதும்-நிறுத்துவதற்கு, நசக்னோஷி-முடியவில்லை என்றால், தத-அப்பொழுது, அப்பியாஸயோகேன-அப்பியாச யோகத்தினல், மாம் ஆப்தும்-என்னை அடைய, இச்ச-விரும்பு, தனஞ்சய-வில்வீரனே. புத்தியை ஸ்திரமாக அந்த சூக்ஷ்ம ஒளி தத்துவத்தில் நிறுத்த முடியாதபோனல் அப்பியாச யோகத்தையாவது செய்து என்னை அடைய விரும்பு. யோகம் என்பது ஒன்றை ஒன்றுடன் சேர்ப்பதாகும். கீழ்நிலை மனம் மேல்நிலை மனதுடன் சேர முயல்வது யோக ஆரம்பம். மேலேறி, விழுந்து மீண்டும் மேலேற முயல்வது அப்பியாசம். கடைசியாக மேல்நிலையிடம் சேர்ந்து மேல் நிலையாக மாறிவிடுவது யோக சித்தி. இரண்டாம்படியான இந்த முயற்சி குன்றுமல் இருந்தாலும் போதும் என்று கிருஷ்ண பகவான் சொல்லுகின்றார். "சீ... சீ. இந்தப் பழம் புளிக்கும்" என்று ஓடின நரியைப் போல் இல்லாமல் மீண்டும் மீண்டும் முயற்சி செய்யவேண்டும். சாலையில் போகும் மோட்டார், கடலில் போகும் கப்பல் எல்லாமே வழியில் அடிக்கடி மாறுவதுண்டு. அப்பொழுது எல்லாம் மீண்டும் மீண்டும் சரியான வழிக்குக் கொண்டு வருவதுதான் இயற்கை. எழுவதும் விழுவதும் நடப்பதும் தள்ளாடுவதும் பிசகல்ல. ஆனல் மீண்டும் மீண்டும் லக்ஷியப் பாதையுடன் போக்கைப் பொருத்துவதுதான் அப்பியாச

யோகம். ஆகவே ஒரே முறையில் பரமாத்ம தத்துவத்திற்குள் மனதை நிறுத்த முடியாதுபோனாலும் அதை லக்ஷியமாகக்கொண்ட பாதையை அமைத்துக்கொண்டு, நம் போக்கை அந்தப் பாதையில் பொருத்தி, தவறியபோதெல்லாம் கவனமாகயிருந்து, மீண்டும் அந்தப் பாதைக்கு வந்து சேருவதுதான் அப்பியாச யோகம். உடனே லாபம் இல்லை என்றாலும் முயற்சி லக்ஷியத்துடன் பொருத்தப்பட்ட பாதையுடன் இணைந்திருப்பதால் நல்ல பலன் கிட்டும் என்ற கருத்தில் அப்பியாச யோகத்தினால் அந்தத் தத்துவத்தை அடையலாம்.

கோவிலூர் ஆதீனம்
கோவிலூர்-630 307

மனதிற்குச் சஞ்சலத் தன்மையும், ஸ்திரமில்லாத தன்மையும் உண்டு. ஒரு பொருளை விட்டு மற்றொரு பொருளுக்குத் தாவும் குணத்திற்குச் சஞ்சலத் தன்மை என்று பெயர். ஒரே பொருளில் அமராது அநிலேயே எழுந்து எழுந்து அமரும் தன்மைக்கு ஸ்திரமற்ற தன்மை என்று பெயர். அப்படிப் பட்ட மனது அப்பியாச யோகத்தினால்தான் ஸ்திரமடையும்.

அப்^{4}யாஸேSப்யஸமர்தோ^{3}Sஸி மத்கர்மபரமோ ப^{4}வ
மத^{3}ர்த^{2}மபி கர்மாணி குர்வன்ஸித்^{3}தி^{4}மவாப்ஸ்யஸி (10)

இதுவும் முடியவில்லை என்றால் ஒரு டாக்டரிடம் ஒரு நோயாளி போகிறார். டாக்டர் முதலில் விலையுயர்ந்த ஊசி மருந்துகளைக் குறிக்கிறார். அவன் அது இயலாது என்று சொல்லுகிறான். அவர் கொஞ்சம் விலை குறைந்த, சாப்பிடுவதற்கு லாயக்கான மருந்துகளைக் குறிக்கிறார். அந்த விலையும் அவனுக்கு அதிகம். மீண்டும் சில மாத்திரைகளைக் குறிக்கிறார். அவைகளின் விலையும் அவனுக்கு அதிகம். கடைசியாக அவர் சில சூர்ணங்களைக் குறிக்கின்றார். அதன் விலை மலிவாக

இருக்கிறது. அப்பொழுது அவன் ஏற்றுக்கொள்ளுகிறான். அதைப்போல அர்ஜுனன் முதல் இரண்டுபடிகளும் தனக்கு ஒவ்வாதவை என்று எண்ணுகிறான். அர்ஜுனன் என்றால் அதிக மனவலியில்லாத சாதாரண ஒரு மனிதன் என்று கருத்து. அந்த நிலையில் கிருஷ்ணன் மூன்றாவது படியாகச் சொல்லுகின்றார்.

அப்யாஸேபி அஸமர்த்தோஸி: அப்பியாசமும் முடியாது என்றால் மத்கர்ம பரமோபவ என்னுடைய வேலை என்ற லக்ஷியத்தைக் கொண்டவனாக இரு. நீ செய்கின்ற வேலைகளை எல்லாம் என்னுடைய ஆளாக இருந்து என் தூண்டுதலின் மேல் எனக்குப் பதிலாகச் செய்வதாக எண்ணிச் செய். அப்படிச் செய்தால் கர்மாணி செயல்களை மதர்தம் எனக்காக குருவன் அபி செய்கின்ற வகையிலும் கூட சித்திம் சித்தியை அவாப்யஸி அடைகிறாய். ஒரு முதலாளியின் பிரதிநிதியாகச் செல்பவன் முதலாளித் தன்மையை அடைகிறான். அவனே அந்த முதலாளிக்கு வரி வாடகை செலுத்தியவனாய் இருந்தும் கூட அந்த முதலாளிக்குப் பிரதிநிதியாக வேறு இடத்தில் வரி வாடகை வசூல் செய்யப்போனால் முதலாளியாகவே பெருமை அடைகிறான். மிகப் பெரிய கம்பெனியின் ஒரு சாதாரணப் பிரதிநிதிகூட அந்தக் கம்பெனியாகவே தன்னை மதித்துப் பேசுகிறான். "நாம் நாம்" என்று மிக அர்த்தபுஷ்டியுள்ள பன்மையைத் தன்னைக் குறிக்க உபயோகிக்கிறான். சாதாரண நிலைமையில் இப்படி இருந்தால் நாம் கண்ணனின் ஏஜெண்டு, செய்வது அவன் செயல், கிடைத்திருக்கிறது அவன் அதிகாரம் என்று மாறாமல் எண்ணினால் சித்தி கிடைப்பதில் என்ன சந்தேகம்? இந்த மருந்தும் அர்ஜுனனுக்கு விலையுயர்ந்ததாகத் தென்படுகிறது.

அதை3 தத3ப்யஸக்தோSஸி கர்தும் மத்3யோக3மாஸ்ரித:
ஸர்வகர்மப2லத்யாக3ம் தத: குரு யதாத்மவான் (11)

அப்பொழுது கண்ணன் கடைசியாக இந்த வழியைச் சொல்லுகின்ருர். அத பிறகு ஏததபி இதைக்கூட கர்தும் செய்ய அஸக்தோஸி சக்தியற்றவனுயிருந்தால் மத்யோகம் ஆஸ்ரித: என்னைச் சேருவதை எண்ணியவனுக யதாத்மவான் தன்னடக்கம் உடையவனுக சர்வகர்மபலத்யாகம் எல்லாச் செய்கைகளின் பலன்களின் தியாகத்தையும் குரு செய்துவிடு என்று வழி சொல்லுகிருர். பலன் என்பது இன்று செய்யப் படும் செய்கையும் அது பலிக்கவேண்டிய காலத்தையும் சேர்த்தே கணக்கிடப்பட வேண்டும். இன்று செய்கின்ற செயல்களுக்குத் தக்க காலத்தில் தான், பலன் கிடைக்கும். ஆகவே அந்தப் பலனைப் பற்றி இப்பொழுதே எண்ணுதிருப்பது நல்லது. அதைவிட அந்தப் பலனையே 'எனக்காகத்' தியாகம் செய்துவிடு. 'அவன் வேலை' என்று வேலையைச் செய்ய முடியாவிட்டாலும் பலனையாவது அந்தப் பரமாத்மாவினுடையது என்று ஒதுக்கிவிடு. இப்படி யாக நான்கு வழிகள் சொல்லப்படுகின்றன.

ஸ்ரேயோ ஹி ஞானமப்4யாஸாஜ்
ஞானத்3த்4யானம் விஸிஷ்யதே
த்4யானத்கர்மப2லத்யாக3ஸ்
த்யாகா3ச்சா2ந்திரனந்தரம் (12)

இந்தச் சுலோகத்தில் படிப்படியாக நான்குவிஷயங்கள் இறங்குமுகமாகச் சொல்லப்படுகின்றன. அப்பியாஸாத் அப்பியாசத்தைவிட ஞானம் ஸிரேய: ஞானம் சிறந்தது. ஞானமில்லாமல் எந்த அப்பியாசமும் பயனில்லை என்று

பொருள். காஷ்மீர் போகவேண்டுமென்று தெற்கு நோக்கிப் போய்க்கொண்டிருப்பதால் லாபமில்லை. ஆகவே ஞானமற்ற அப்பியாசம் வீண். ஞானத்தை அப்பியாசம் செய்ய ஞானத்தைத் தேடுபவனை நம்பிக்கையற்றவன் என்று சொல்லக் கூடாது. ஞானம் சிறந்ததென்றால் அப்பியாசம் வேண்டாம் என்ற கருத்தல்ல.

ஞானாத் - ஞானத்தைவிட, தியானம் தியானம் விஸிஷ்யதே-சிறந்தது. தியானமின்றி ஞானம் கிடைக்காது' தியானாத் - தியானத்தைவிட கர்மபலத்தியாக-கர்மபலத்தின், தியாகம் சிறந்தது. த்யாகாத்-தியாகத்திற்கு அனந்தரம்-பிறகு சாந்திஹி - மன அமைதி. அடியிலிருந்து தொடர்ச்சியாக முடிவு வரையில் பார்த்தால் நாம் கொண்டுள்ள ஆசைச் சஞ்சலத்தை நீக்கி அமைதி ஏற்பட்டால் தான் தியான நிலை ஏற்படும். இது ஆத்மீக விஷயத்திற்கு மட்டுமல்ல. உலகத்திற்கும் பொருந்தும். வேலையைப் பற்றியோ அதனால் ஏற்படும் பலனைப்பற்றியோ எண்ணாத நிலை ஞாயிற்றுக்கிழமை மாலை ஏற்படுவதற்கு இந்தத் தத்துவம் தான் காரணமாகும். விடுமுறை நாளில் வேலையைப்பற்றிக் கவலையில்லை. முடிவைப் பற்றியும் அக்கரையில்லை. ஆத்மீகத் துறையிலும் அப்படித் தான். செய்கைகளின் பலனைத் தியாகம் செய்தால் அமைதி ஏற்படுகிறது. அந்த நிலையில் தியானம் சாத்தியமாகிறது. மனதை அடக்குகிறோம். அந்த நிலையில் அப்பியாசத்திற்கும் ஞானத்திற்கும் தக்க சூழ்நிலை ஏற்படுகிறது.

நன்கு யோசித்தால் கிருஷ்ணன் தந்த இந்த செயல் முறை பரிபூரணமான அமைப்பைக் கொண்டிருப்பதைப் பார்க்கலாம்.

இதுவரையில் பலனைத் தியாகம் செய்தால் அமைதியும் அமைதியின் அடிப்படையில் தியானம், ஞானம், அப்பியாசமும் ஏற்படுவதைப் பார்த்தோம். ஒரு ஓவியன் தான் தெய்வம் என்று கருதுகின்ற ஒரு பொருளின் சித்திரத்தை வரைந்தால் அதில் தன்னையே மறந்து ஈடுபடுகின்றான். அது எப்படி முடியுமென்றோ எவ்வளவு விலை பெறும் என்றோ அவன் யோசிப்பதில்லை. ஏன்? அப்படியமைந்த படத்தை லக்ஷக்கணக்கான பணம் கிடைத்தாலும் விலைக்குக் கொடுப்பதற்கும் தயாராய் இல்லை. பட்டினி கிடக்க நேர்ந்தாலும் "நிறைந்த உள்தூண்டுதல் கொண்டு" எழுதப்பட்ட படத்தை லக்ஷக்கணக்கான ரூபாய்களுக்கும் விற்க மறுக்கும் ஓவியர்களும் உண்டு. பலனை மறந்த நிலையில் தான் அமைதி ஏற்படுகிறது. அந்த அமைதிதான் நிறைந்த உள்தூண்டுதலால் சிறப்புப் பெற்ற வாழ்வாகும். அந்த நிலையில் தியானத்திற்கு வசதி கிடைக்கிறது. தியானம் செய்யும் போது சாஸ்திரங்களைப் படித்து ஞானத்தைச் சேகரிக்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்படுகின்றது. அதற்கேற்ற முயற்சி (அப்பியாசம்) செய்து ஞானத்தைப்பெற தூண்டுதல் ஏற்படுகின்றது.

பக்தியின் முழு உருவம்.

இந்த அத்தியாயத்தில் கண்ணன் சகுண அல்லது நிர்க்குணப் பிரம்மத்தை உபாசனைசெய்தால்பரிபூரண நிலையை அடையலாம் என்று சொல்லுகிறார். அத்துடன் நிற்கவில்லை. நம்மவர்கள், ஏன் மற்றவர்கள்கூட, நெறிகளைப் போதிக்கும் நீதி நூல் நம்மிடையே கிடையாது என்று சொல்லுகிறார்கள். பக்தி யோகமாகிற இந்த அத்தியாயத்தில் கிருஷ்ணன்

ஆன்மீக ஒளி நிலை பெறுவதற்காக அமைய வேண்டிய நெறி முறைகளைத் தான் வகுத்திருக்கிறார். அதை அறிந்து கொள்ளாது பேசுகின்றார்கள். "அவர்கள் எனக்குப் பிரியமானவர்கள். அதாவது அவர்கள் தான் முழு நிலையை அடைய முடியும்" என்று கண்ணன் குறிப்பதெல்லாம் உடல், மனது, புத்தி இம்மூன்றுக்குமான தரத்தை நிர்ணயிப்பது தான்.

அத்3வேஷ்டா ஸர்வபூ4தானாம் மைத்ர: கருண ஏவ ச
நிர்மமோ நிரஹங்கார: ஸமது3:க2ஸுக2க்ஷமீ (13)

ஸந்துஷ்ட: ஸததம் யோகீ3 யதாத்மா த்3ருட4நிஸ்சய:
மய்யர்பிதமனோபு3த்3தி4ர்யோ மத்3ப4க்த: ஸ மே ப்ரிய: (14)

ஸர்வபூதானாம் அத்வேஷ்டா: எல்லா உயிர்களிடத்தும் அன்பு கொள்ளவேண்டும். இந்தக் கருத்து எல்லோராலும் மறக்கப்பட்டிருக்கிறது. நாஸ்திகர்கள் தான் வெறுக்கிறார்கள். ஆஸ்திகர்களும்கூட வெறுக்கிறார்களே! ஆன்மீகத் துறைக்கு இல்லாதபோனாலும் அன்றாட வாழ்க்கைக்காவது ஒருவரையும் வெறுக்காத நிலை ஏற்படவேண்டும். நேசித்தால் செலவு அதிகமாகும் என்று எண்ணுதல் கூடாது. ஒருவனை நேசிக்கிறோம் என்றால் அவனை நாம் அறிந்திருக்கிறோம் என்று கருத்து. எல்லா உயிர்களுக்குள்ளும் நாம் அடைய எண்ணும் அந்த முழு முதற் பொருள் இருக்கிறது என்று தெரிந்தால் நாம் நேசிப்போமேயல்லாது வெறுக்கமாட்டோம்.

மைத்ர: நண்பனாக இருக்க வேண்டும். வெறுப்பு நீங்கி உண்மையும் தெரிந்தால் நட்பு ஏற்படுவது இயற்கை.

கருணை ஏவச: எல்லோரிடமும் கருணையும் கொண்டிருக்க வேண்டும். எல்லா உயிர்களிடத்தும் வெறுப்புப் புத்தி இல்லாமல் நட்பும் கொண்டிருந்தால் கருணை ஏற்பட முடியும். ஈஸ்வரன் எல்லா உயிர்களுள்ளும் இருக்கின்றார் என்ற உண்மையான புத்தி ஏற்பட்டால் அந்த நிலை ஏற்படாமல் இருக்க முடியாது. உதாரணமாக ஒரு பள்ளிக்கூடத்தில் "வினோத உடைப்"போட்டியில் ஒரு பையன் குஷ்டரோகிப் பிச்சைக்காரனாக வந்தால் அதைக் காணுகின்ற தந்தை அங்கஹீனமில்லாத நம் பையன் கோபு தான் அந்த உடைக்குள் இருக்கிறான் என்று நன்றாகத் தெரிந்துகொள்ளுகிறார். அந்த நிலையில் அவர் அவனை வெறுப்பதில்லை. அவனே அருகில் வந்து பிச்சை கேட்டால் ஏ! கோபு என்று அதட்டி அவனுடைய உண்மைத் தன்மையை எழுப்பிவிடுகிறார். அதைப்போல கயவன் உள்ளேயும் அருவருக்கத்தக்க தோற்றம் அல்லது செயல்கள் கொண்ட மனிதன் உள்ளேயும் அவர் தான் இருக்கிறார் என்கின்ற கருத்துக் கொண்டால் வெறுப்புத் தொலைந்து நட்பு ஏற்படும். அதற்கடுத்தபடியாக கருணையும் ஏற்படும். கருணை என்றால் எல்லை மீறி செலவழித்துவிட்டு நாம் பிறர் கருணைக்கு ஏங்கி நிற்கும் நிலையை அடைவது என்று கருத்தல்ல. கருணையை ஒரு பார்வை மூலம் காட்டலாம். அது ஒரு பெரிய பலனைத் தரும். கஷ்டப்பட்டவனுக்கு ஒரு தைரியத்தையும், பெரும் ஊக்கத்தையும் அளிக்கும்.

நிர்மமோ நிரஹங்கார: நான், எனது என்ற முனைப்பும், மோகமும் அற்றவன். நமக்கில்லாத ஒரு பெருமையை நாமே ஏற்றுக்கொள்வதால் சில சமயம் முழு வளர்ச்சியின் எல்லையை அடையும் முயற்சியை மறந்து அசட்டுப்

பெருமையைக் காப்பாற்றுவதில் நேரத்தைக் கழித்து விடுகிறோம். அதைவிட்டுப் பணிவைமேற்கொண்டோமானல் தானே உரிய பெருமை கிடைத்துவிடும். துளசிதாஸர் நான் தூசியாக இருப்பேன் என்று சொன்னதற்கும் மேல்நாட்டு ஆசிரியர் "பணிவால் வெற்றியடையலாம்" என்றதற்கும் அதுதான் கருத்து. கல்லாகஇருக்கும்வரை காலால் மிதிக்கப் படுகின்றது. அதுவே தூசியான பிறகு பிறர் தலையில் அமர்ந் திருக்கும் பெருமையை அடைந்துவிடுகிறது. அதேபோல எனது என்கிற மோகமோ முனைப்போ கூடாது. எங்கும் உள்ள அந்தப் பரம்பொருளை எண்ணி எண்ணி நாம் அந்த முனைப்பற்ற சமநிலையை அடையவேண்டும்.

சமதுக்க சுகக்ஷமி: துயர் வந்தாலும் இன்பம் வந்தாலும் சமமாகப் பொறுத்துக்கொள்ள வேண்டும். வாழ்நாளில் ஒரு சிறிய பகுதியைத் தாங்கிவரும் ஒரு கடிதத்தில்கூட முதல் வரி மங்களமாகவும் அடுத்த வரி துயரமாகவும் எழுதி வருகிறது. நல்ல தந்தி கொண்டுவரும் ஆளுக்குப் பின்னாலேயே கெட்ட தந்தியும் கொண்டுவருகிறான். அழுவ தற்கு என்று ஆரம்பம் செய்தவுடனேயே சிரிக்கவேண்டிய நிலை ஏற்பட்டுவிடுகின்றது. இந்த உலகத்தில் இதுதான் இயற்கை. அந்த நிலையில் இரண்டையும் ஒன்றாக பாவிக்கும் குணம் வந்தேயாகவேண்டும்.

ஸததம் ஸந்துஷ்ட: எப்பொழுதும் ஒரு ஆனந்த நிலை யில் உள்ள, யோகி யோகிகள் யதாத்ம தன்னை அடக்கியவர் கள் த்ருட நிச்சய: கெட்டியான உறுதி கொண்டவர்கள்...... உறுதி இருந்தால் ஆயிரம் அலைத்தாலும் அலையமாட்டோம். ராமன் என்ற பெயர் தாங்கியவனை, நான் ராமன் தான்

என்று நிச்சயம் கொண்டவனை, எவ்வளவு பேர் நீ "கோபாலன் கோபாலன்" என்றாலும் அவன் மாறப்போவதில்லை. அதைப் போலப் பரம்பொருளின் உண்மையைத் தெரிந்தவன் அசங்காமல், கலங்காமல் முன்னேறுகிறான்.

மைய்யர்பித மனோ புத்திஹி: எனக்கு அர்ப்பணம் செய்யப்பட்ட மனதையும், புத்தியும் உடையவர்கள். இதுவரை கூறப்ப்ட்ட முறைகளைக்கொண்டு யோமத்பக்த: எவன் என்னுடைய பக்தனோ, அவன் எனக்குப் பிரியமானவன். சூரியன் வெளிச்சம் தந்தாலும் கதவை மூடியிருப்பவனுக்கு அதுகிட்டாது. அதைப் போலக்கடவுளிடம் பக்தி செய்பவன்தான் அவன் கருணையைப் பெறமுடியும்." அவன் தான் எனக்குப் பிரியன் என்று கண்ணன் சொல்லுகின்றார்.

ஆன்மாவைப்பற்றி ஏதோ கண்ணன் "மலை உச்சியிலே நின்று அஞ்ஞானிகளை அழைத்து" வழி கூறியதாக எண்ணக்கூடாது. மனிதனுடைய உள் வளர்ச்சியாகிய மலையின் உச்சியில் நின்று அந்த ஆன்ம ஒளி கீழே நோக்கிச் செல்லும் மனதிற்குத் தந்த அறிவுரை ஆகும். வெறுப்பற்ற நட்பும், கருணையும் கொண்டு, தான் என்ற முனைப்பில்லாமல், சுகதுக்கங்களைச் சமநிலையில் வகித்து, எப்பொழுதும் அமைதியின்பம் கொண்டவர்களே இந்த வழியில் ஆன்மீக முன்னேற்றம் இல்லை என்றால் அந்த பக்தி என் அன்பைப் பெறாது என்று கண்ணன் சொல்லுகின்றார். ஆகவே ஆன்மீக வளர்ச்சிக்கு அனுகூலமாக நம்முடைய சமூக உறவும் செயல்களின் தரமும் எவ்வளவு உயரவேண்டும் என்று. இங்கே சந்தேகமற்ற முறையில் கூறப்பட்டிருக்கின்றது.

யஸ்மான்னோத்³விஜதே லோகோ
லோகான்னோத்³விஜதே ச ய:
ஹர்ஷாமர்ஷப⁴யோத்³வேகை³ர்
முக்தோ ய: ஸ ச மே ப்ரிய: (15)

மற்றும் சில தேவைகள். யஸ்மாத் லோக: நஉத்விஜதே. எவனைக் கண்டு உலகம் மனச்சஞ்சலம் அடையாதோ...... கலகக்காரர்கள், சோம்பேறிகள், பொல்லாதவர்கள், பிறர் உழைப்பைத் தின்கிறவர்கள் இவர்களைக் கண்டால் உலகம் சஞ்சலம் அடைகின்றது. வேதனை கொள்கிறது, பரபரக்கிறது. அப்படியில்லாதவர்கள் என்று பொருள். லோகாத்ய: நஉத்விஜதே. எவன் உலகத்தைக் கண்டும் சஞ்சலம் அடைய மாட்டானோ...... உண்மையறிந்த மகான்கள், உலகத்தைக் கண்டும் சஞ்சலம், பயம் அல்லது பரபரப்பு அடைவதில்லை. இயேசு கிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்தார்கள். அவர் அவர்களுக்காக ஆண்டவனிடம் மன்னிப்புக் கோரினர். சாக்கரட்டீஸுக்கு விஷம் தந்தார்கள். அவர் உலகம் முன்னேறட்டும் என்று ஆசீர்வதித்து மறைந்தார். பிரஹலாதனை அவன் தந்தை வருத்தினன். கற்பனைக்கும் அப்பாற்பட்ட தொந்தரவுகள் தந்தான், என்று புராணம் கூறுகின்றது. அப்பொழுதும் பிரஹலாதன் தன்னிலை தளரவில்லை. தந்தையையும் வெறுக்கவில்லை. துருவனுக்கும் அதே நிலைதான் ஏற்பட்டது. மனித உள் வளர்ச்சியின் ஆன்மீக எல்லையின் குன்றேறி நின்றவர்கள் உலகத்தின் விபரீதப் போக்கைக் கண்டு அஞ்சுவதில்லை.

ஹர்ஷாமர்ஷ பயோத்வேகைர் முக்தோய: சந்தோஷம், பொறுமை, பயம், ஆவல் பதற்றம், இவைகளிலிருந்து எவன் விடுபட்டவனோ........ இந்த மிகச் சிறந்த அருள் நிலையை

ஒரு கவி ஒரு வீட்டின் சமையலறையில் பார்த்ததாக வர்ணிக்கிறார். இரவுச் சாப்பாடு முடிந்த பிறகு தாயும் தந்தையும் அலைக்கழிக்கும் ஆரவார சந்தோஷத்தை மறந்து பொறுமை, பயம் ஒன்றுமின்றிப் பரபரப்பற்று அமைந்த நிலையில் குழந்தையுடன் விளையாடிக்கொண்டிருக்கின்றனர். அதே நிலை இரண்டு நிமிஷ தியானத்தில் கிடைத்தால் போதும்.

அனபேக்ஷ: ஶுசிர்த³க்ஷ உதா³ஸீனோ க³தவ்யத²:
ஸர்வாரம்ப⁴பரித்யாகீ³ யோ மத்³ப⁴க்த: ஸ மே ப்ரிய: (16)

இதுவரை நாம் புற உலகுடன் கொண்டிருக்க வேண்டிய உறவுச் செயல்கள் பற்றிக் கூறப்பட்டன. இப்பொழுது இந்தச் சுலோகத்தில் தியானத்தில் அமையவேண்டிய நிலை விளக்கப்படுகின்றது.

அனபேக்ஷ: அபேக்ஷையில்லாதவனாக........ அபேக்ஷை என்றால் ஒட்டி நிற்றல் அல்லது எதிர்பார்த்தல் என்று பொருள். உடல், மனம், புத்தி இவைகளை ஒட்டி நிற்காமல் ஆத்மாவில் லயிக்கவேண்டும். ஶுசி: சுத்தமாக....... இதயம் புனிதமாய் இருக்கவேண்டும். பதினோருவது அத்தியாயத்தில் சொன்னபடி மாறுதல்களுக்கு அடிப்படையாய், ஆனால் தான் மாறாமல் நிற்கும் பரம்பொருள் சொரூபத்தையறிந்து அதிலே லயித்து நின்றால் இந்தச் சுத்த நிலை ஏற்படும். தக்ஷ: திறமையுடன்... திறமை என்றால் புறப்பொருளை விவேகம் செய்து காணும் திறமையைக் குறிக்கவில்லை. ஆத்ம சாதனைக்குத் தக்கது எது, தகாதது எது என்று பகுத்தறிகின்ற விவேகத்தைக் குறிக்கின்றது. உதாஸீன: என்ன முயன்றாலும் உலக வாழ்வில் ஏற்றத் தாழ்வுகள், சுகதுக்கங்கள் குறைவது இல்லை. இடமாற்றம் அமைதி தரும் என்று எண்ணுவது

தப்பு. சாதுக்கள்கூடச் சண்டையிட்டுக் கொள்ளலாம்; சந்தையில்கூட அமைதியைக் காணலாம். ஆகவே நாம் மனதில் அலைபடாமல், தாக்கப்படாமல் இருக்கும் நிலையை ஏற்படுத்திக் கொண்டால் ஒழிய வேறு வழியில்லை. அந்த நிலை தான் உதாசீன நிலையாகும். கதவ்யத: கவலையில்லாதவர்களாக....

ஸர்வாரம்ப பரித்யாகி: எல்லா ஆரம்பங்களையும் ஒழிக்கின்றவனான என் பக்தன் எவனோ அவன் எனக்கு இனியன். இந்தச் சுலோகத்தின் கருத்துக்களைத் தியானத்திற்கென்று வழிகாட்டும் கருத்துக்கள் கொண்ட சுலோகமாக எடுத்துக் கொள்ளவேண்டும். அந்த நிலையில்தான் "ஸர்வாரம்ப பரித்யாகி" என்ற சொல்லுக்கு நினைத்த இடத்திற்கு இழுத்துச் செல்லும் எண்ணங்களை மூளையிலே கிள்ளி எறிந்து விட்டுத் தியானத்தில் அமர வேண்டும் என்கின்ற கருத்தைப் பொருளாகப் பெறமுடியும். தியான நோக்கில் என்பதை விட்டு வேறு பொருள் கொண்டோமானால் இல்லாத வார்த்தைகளை இழுத்துச் சேர்க்க நேரிடும். "அஹங்கார மமகாரயுக்த கர்மங்களின் ஆரம்பத்தைத் தியாகஞ் செய்கின்றவன் என்று அர்த்தம் சொல்லவேண்டும். ஒரு சாஸ்திர நூலை விளக்கும் பணியில் இறங்குபவர் மிகவும் தேவைப்பட்டால் ஒழிய அல்லது தானாகவே சேர்க்கவேண்டியதாக அமைந்திருந்தால் ஒழியப் புது வார்த்தைகளைச் சேர்ப்பதைத் தவிர்க்கவேண்டும்.

யோ ந ஹ்ருஷ்யதி ந த்[3]வேஷ்டி ந ஸோசதி ந காங்க்ஷதி
ஸுபா[4]ஸுப[4]பரித்யாகீ[3] ப[4]க்திமான்ய: ஸ மே ப்ரிய: (17)

யோ: எவன், நஹ்ருஷ்யதி: சந்தோஷப்படுவதில்லையோ.... துக்கம் எப்படி ஆளை அலைக்குமோ அதே மாதிரி சுகமும்

அலைக்கும். திடீரென்று வந்த இன்பத்தால், உதாரணமாகப் போட்டிப் பரிசில் லக்ஷ ரூபாய் கிடைத்தது என்று கேட்ட வுடன் இறப்பவர்களும் உண்டு. ஆகவே இன்பத்தால் அலை படாத நிலை வேண்டும். நத்வேஷ்டி: எப்பொழுதும் குறை கூறும் ஒரு நிலை நம்மிடையே ஏற்பட்டிருக்கிறது. குற்றமே கண்டுவேதனையே கொண்டு பேய்பிடித்த மனதாக இருக்கும் நிலை மாறவேண்டும். நஸோசதி: காரணம் இல்லாமலோ இருந்தோஎப்பொழுதும்முகத்தைத்தூக்கிவைத்துக்கொண்டு அழுகின்ற நிலை உதவாது. நகாங்க்ஷதி: ஆசைகள் அதிகமானல் மனது தாங்குகிறதில்லை. ஒரு ஆசையும் பலன் தருகிறதில்லை. ஒரு ஆசை பலன் தரும வரையில் வேருெரு ஆசைகொள்ளக் கூடாது. பல ஆசைகள் பலன் தருவதில்லை. ஆசைப்படுவதை யும் பலன் தரும் வண்ணம் ஆசைப்படுவது நல்லது. ஸுபாஸுபபரித்யாகி: "நல்லது செய்தேன், எனக்குப் புண்ணியம் கிடைக்கும். கெட்டது செய்தேன், எனக்குப் பாபம் கிடைக்கும்" என்கிற சுப அசுப பலன்களை வேண்டி நிற்கும் நிலையும் இல்லாதிருக்க வேண்டும். இப்படி இன்பத் தால் அலைக்கப்படாமல் வெறுப்பால் திரியாமல், கவலையும், ஆசையுமற்று நன்மை, திமைகளின் கற்பனைப் பலன்களை விட்டு, ய: பக்திமான்: எவன் பக்தி செய்கிருனே, ஸமேப்ரிய: அவன் எனக்குப் பிரியமானவன்.

பக்தன், குறிப்பிட்ட சில நிபந்தனைகளின்படி வாழ்வை வாழ்ந்து அந்த அடிப்படையில் உள் வளர்ச்சியை ஏற்படுத்திக் கொண்டு ஆன்மிகப் பயிற்சி செய்யவேண்டும். அது இல்லை யென்ருல் லாபமில்லை. செய்கைகள், மனம், புத்தி, இம் மூன்றையும் கண்ணன் குறிப்பிட்ட சில ஏற்பாடுகளுடன் பயிற்றுவித்தால்ஒழிய பக்தன் அவனுக்குப் பிரியனுக மாட்

டான். முக்கியமான சாவியைத் திறக்காமல் மற்ற என்ன செய்தாலும் கார் ஓடாது. அதைப்போல மற்ற எந்த முறையில் பக்தி செய்தாலும் வெறும் பக்தியால் மட்டும் லாபம் ஏற்படாது. மனது பக்குவ நிலையை அடைய வேண்டும். கருணையும் நட்பும் காட்டும் பழக்கம் ஏற்படவேண்டும் என்பதற்காகத்தானே குடித்தனம் நடத்திய பிறகு சந்நியாசம் கொள்ளலாம் என்று சில சமயம் விதிக்கப்படுகிறது. ஆகவே இம்மூன்றையும் (செய்கைகள், மனம், புத்தி) ஒருவழிப் படுத்தித் தெய்வீக ஒளியின் பாதையில் செலுத்துவதற்காகக் கொடுக்கப்பட்ட நிபந்தனைகளை விட்டோ அல்லது மீறியோ பக்தி செய்வதில் லாபமில்லை.

ஸம: ஸத்ரௌ ச மித்ரே ச ததா[2] மாநாபமாநயோ:
ஸீதோஷ்ணஸுகது[2]:கே[2]ஷு ஸம: ஸங்க[3] விவர்ஜித: (18)

ஸம: ஸத்ரௌ ச மித்ரேச: நண்பன், எதிரி - இரண்டு வகையினரிடத்திலும் ஒரே வகையான மனப்போக்கைக் கொண்டிருத்தல் வேண்டும். அதன் கருத்து நண்பனையும் எதிரியாகப் பாவிப்பது என்பது அல்ல. எதிரியையும் நண்பனைப் பாவிக்கவேண்டும். ஒருவன் நண்பன் அல்லது எதிரியாக எப்படி ஆகிறான் என்று கவனித்தோமானால் இந்தப் பயிற்சி சுலபமாகும். யாருடைய எண்ணங்கள் நம்முடைய எண்ணங்களுடன் இணைகின்றனவோ அவன் நம்முடைய நண்பன். நம்முடைய எண்ணங்களுக்கு மாறான எண்ணங்கள் கொண்டவன் எதிரி. ஆகவே மற்றவனுடைய எண்ணங்களுக்குத் தக்கவாறு நம்முடைய எண்ணங்களை மாற்றிக்கொண்டு விட்டால் எதிரியும் நண்பனாகி விடுவான். மனோ விஞ்ஞானப்படி பார்க்கும்போது விரோதத்திற்கு

அடிப்படையில் ஒரு பற்று இருப்பதைக் காணலாம். பற்று தடைப்படும்பொழுது அது முறியக் காரணமாயிருந்தவனிடம் விரோதம் ஏற்படுகிறது. நான் ஒரு பொருளை அல்லது ஒருவனை விரும்புகின்றேன் என்றால் என் விருப்பங்கள் அந்தப் பொருள் அல்லது அந்த மனிதன்மேல் தாராளமாகப் பாய்கின்றன. இடையே யாராவது வந்தால் தடைப்படுகின்றன. தடைப்பட்ட விருப்பம், சினங்கொண்டு திரும்பி விரோதமாக மாறுகிறது.

அடுத்தவீட்டுக் குழந்தை நம்மைத் தொந்தரவு கொடுத்தால், அதை நாம் தொலைத்துவிட வேண்டுமென்று விரும்புவதில்லை. அதாவது எப்படி ஒழிக்கலாம் என்று பிரமாதமாகத் திட்டம் தீட்டுவதில்லை. ஏன் என்றால் "குழந்தைகள், குழந்தைகள் தான்" என்று தெரியும். அதேபோல ஆன்மீக வளர்ச்சியில் முன்னேறுகிறவன் மற்ற எந்தப் பொருளும் மட்டம் என்று தெரிந்துகொள்ளுகிறான். அந்தப் பொருளின் காரணமாக விரோதத்தை எழுப்பும் எதையும் ஒரு பொருளாகக் கணக்கிடமாட்டான். அதைவிட்டு விரோதகாரணமாகவே என் விரோதிக்குத் தொந்தரவு ஏற்பட வேண்டுமென்றே சில சமயம் பக்தியும் செய்யப்படுகின்றது! இது மதியீனம் அல்லவா? சத்துருவையும், மித்திரனையும் ஒன்றாகப் பாவிக்க வேண்டும்.

•

ததா மாநாபமாநயோ: அப்படியே மான அவமானத்திலும்...... வீணில் நம்மை அவமானப்படுத்தினார்கள் என்றோ, நம்மைச் சிறப்புவித்தார்கள் என்றோ மனதில் ஒரு ஆட்டம் ஏற்படக்கூடாது. இப்படிச் சிறப்புக்கு ஏங்கியும், அவமானத்திற்கு நொந்தும் காலங் கழித்தால் ஆன்மீக வளர்ச்சிக்கு நேரமிருக்காது. புத்த பகவானை ஒரு கடைக்காரன் வாய் கொண்ட மட்டும் நிந்தித்துத் திட்டினான். அவர் நின்று முழுவதையும் கேட்டுவிட்டுச் சிரித்துக்கொண்டு

போய் விட்டார். கூடவிருந்த சிஷ்யன் "தங்களுக்குத் தந்த அவமானத்திற்குத் தக்க பதில் அவனுக்குத் தருகிறேன்" என்று துடித்தான். புத்தர் சிரித்துக்கொண்டு, "அவைகளை நான் ஏற்கவில்லை.ஏற்காதவொன்றுக்குப் பதில் தருவது அவசிய மில்லை. நீ ஏற்றுக்கொண்டாய் என்றால் நீ கொடுக்கலாம்" என்று சொன்னார். மானம் அவமானம் எல்லாம் நாம் கொண்டிருக்கும் மனப்பாங்கைப் பொறுத்ததுதான். பத்துப் பேர் நல்லது சொன்னால் இருபது பேர் கெட்டது தான் சொல்லுவார்கள். இடுப்பிலே காற்றடித்த ரப்பர் வளையம் (லைப்பெல்ட்) அணிந்த ஒருவன் சமுத்திர அலைகளில் முழுகா மல் இருக்கமுடியும். அதேபோல ஆன்ம தத்துவத்தில் அழியாத நம்பிக்கை கொண்டவனுக்கு இவையெல்லாம் பொருட்டல்ல. தாமரை இலையில் நீர் போல இருப்பான்.

ஸீதோஷ்ண ஸுகதுக்கேஷு ஸம: அப்படியேதான் குளிர் அல்லது வெம்மையிலும்...கொஞ்சம் குளிர்ந்தால் இழுத்துப் போர்த்திக்கொண்டு வெட வெட என்று நடுங்குவதும், கொஞ்சம் வெயில் வந்தால் உஸ்.... உஸ்.... என்று மூச்சு விடுவதும் நம்முடைய திருந்தாத மன நிலையைக் காட்டுகிறது. இதோ, யாகசாலைப் பந்தலில் சூடும் இறுக்கமும் இருக்கிறது. சிறிய புஸ்தகத்தை ஆட்டினால் அது தீர்ந்துவிடுமா? சூடு இருக்கிறது. அத்துடன் அதைப்பற்றிக் கவலைகொள்ளக் கூடாது. மழை பெய்கிறது. அத்துடன் அதை மறந்துவிட வேண்டும். அதை விட்டுவிட்டுத் தொடர்ந்து வேதனைப் படுவதால் லாபமில்லை. அதைப்போல சுகம் துக்கம். அவ் விரண்டும் அப்படியேதான். காலையில் எழுந்தவுடன் பல் துலக்கப் பேஸ்ட் இல்லை துக்கம்; காபி வந்தது உடனே இன்பம்; அடுத்து ஒரு செலவு, உடனே வருத்தம். இப்படி தை தை என்று கூத்தாடிக்கொண்டிருந்தால் ஆன்ம வளர்ச் சிக்கு நேரம் ஏது! ஆகவே ஸங்க விவர்ஜித: பற்று இல்லாத

வனுக... இதுவரையில் சொல்லிவந்ததெல்லாம் மனப்பாங்கு திருந்தி அமையாத காரணத்தினுல் தான் ஏற்படுகின்றன. அப்பாங்கு திருந்தி அமைந்துவிட்டால் தான் வாழ்க்கை ஆன்ம வளம் பெறும்.

துல்யநிந்தா[3]ஸ்துதிர்மௌனீ ஸந்துஷ்டோ யேன கேனசித்
அநிகேத: ஸ்தி[2]ரமதிர் ப[4]க்திமான்மே ப்ரியோ நர: (19)

தொடர்ந்து சில நிபந்தனைகள் கூறப்படுகின்றன. துல்ய நிந்தாஸ்துதி: பிறர் தூற்றினுலும் போற்றினுலும் பாதிக்கப் படாத மனே நிலை வேண்டும்.

மௌனி: மௌனமான நிலை வேண்டும். மௌனமான நிலை என்ருல் மௌனம் மௌனம் என்று பறைசாற்றும் அந்தத் தடபுடல் மௌனத்தை,வாய்பேசாமல் அபரிமிதமான சமிக்ஞைகாட்டுதலைக் குறிக்கவில்லை. இது மனமௌனத்தைக் குறிக்கிறது. ஆசையைத் துறக்காத மௌனத்தை ஏற்றுக் கொள்பவர்கள் வீட்டிலே வீண் சங்கடத்தை எழுப்புவதைப் பார்க்கலாம். செயல்களின் போக்கைக் குறைத்துப் பேச்சின் சக்திச் செலவை நிறுத்தி மனதிற்கு வலுவூட்டுவதையே மௌனம் என்று சொல்லுகிறேம்.

யேனகேனசித் ஸந்துஷ்ட: தானுகக் கிடைத்த எதையும் கொண்டு திருப்தி அடைய வேண்டும் இதுதான் வேண்டும், இது இல்லை என்ருல் வாழ்வே புளித்துவிடும் என்கின்ற மன நிலை போய், “கிடைத்தது தெய்வகிருபை; இது போதும்” என்கின்ற மனத்திருப்தி அடைய வேண்டும்.

அநிகேத: வீடில்லாத் தன்மை.... குடியிருக்கிற வீடோ, நம் வீடோ, அதை சாஸ்வதமாக எண்ணக்கூடாது. அதற்காக அதை அசுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்,

இடித்துவிடவேண்டும் என்று கருத்தல்ல. அதிலே அனுவசியமான ஒரு அசட்டுப் பற்றுதல் கூடாது. சாதுக்கள், சந்நியாசிகள், பரிவிராஜகர்கள் இவர்களெல்லாம் ஓரிடத்தில், ஒரே மரத்தின் அடியில்கூட இருபத்திநான்கு மணி நேரத்திற்குமேல் தங்குவதில்லை. அதற்கு மனப்பாங்கு தான் காரணம்.

ஸ்திரமதி: ஸ்திர புத்தி கொண்டவன். அதாவது புத்தியை அந்தத் தெய்வ நிலையின்பால் அசையாமல் ஒட்டிவைத்தவன் என்று பொருள். அப்படிப்பட்ட பக்திமான் மேப்ரியோ நர: பக்திமானான மனிதன் எனக்கு இனியன்.

யே து த[4]ர்ம்யாம்ருதமித[3]ம் யதோ[2]க்தம் பர்யுபாஸதே
ஸ்ரத்[3]த[3]தா[4]னா மத்பரமா ப[4]க்தாஸ்தேऽதீவ மே ப்ரியா: 20

இந்தச் சுலோகத்தில் இதுவரையில் சொல்லப்பட்ட கருத்துக்களுக்கு முடிவுரை கூறப்படுகிறது. தர்ம்யாம்ருதம் இதம்: இந்த அழியாத சனாதன தர்மத்தை, யதோக்தம்: சொல்லபட்டபடி, யேதுபர்யுபாஸதே: யார் நடத்துகிறார்களோ, சிரத்ததான: ஏற்கனவே முன்பு ஓரிடத்தில் விவரிக்கப்பட்டபடி சாஸ்திரம், குருவாக்கியம் இவற்றின் உண்மையை நன்றாக மனதில் ஏற்றுக்கொள்ளுவது என்ற கருத்தில் சிரத்தையுடையவர்களாக, மத்பரமா: என்னை லக்ஷியமாகக்கொண்ட, பக்தா: பக்தர்கள், மே: எனக்கு, அதீவப்ரியா: மிகவும் பிரியமானவர்கள். பொய் பக்தர்கள், போலி பக்தர்கள், ஒரு பகுதி வெறுப்புக்கொண்ட பக்தர்கள், உலகிற்கு நன்மை செய்யாத பக்தர்கள், ராகத் துவேஷங்களால் சலனமடைகின்றவர்கள் இப்படியெல்லாம் இல்லாமல் பகவான் சொல்லி வந்த முறையில் உடல், மனம், புத்தி இவைகளின் ஒருமித்த தெய்வப் போக்கைக் கொண்ட பக்தர்கள் எனக்கு மிகப் பிரியமான பக்தர்கள் என்று பகவானே கூறுகிறார்.

Printed by V. Subburayalu Naidu Press, Madurai-56.

6986
R6516

TYAGI.

Fortnightly organ of Chinmaya Mission.

KOVILOOR MADALAYAM

All the discourses by Swami Chinmayananda in different Yagnasalas are being printed in the pages of the TYAGI. Besides, other great writers on spiritual truths are taking up their pens to brighten up the above Magazine.

Subscription for 24 issues every year.
Inland Rs. 6/- Foreign 12 sh. $ 2.50.


Yagnasala office will receive your subscription. Kindly give full name and address.

All M. O.s and cheques to:

Sri. KUNJITAPADAM,
Treasurer, Tyagi,
144, MOUNT ROAD, MADRAS, 6.

ஓம் நமோ நாராயணாய ஓம் நமோ நாராயணாய
ஓம் நமோ நாராயணாய ஓம் நமோ நாராயணாய
ஓம் நமோ நாராயணாய ஓம் நமோ நாராயணாய
ஓம் நமோ நாராயணாய ஓம் நமோ நாராயணாய
ஓம் நமோ நாராயணாய ஓம் நமோ நாராயணாய

FIAT 'THE NEW 1100' SEDAN



ENTIRELY NEW STYLED **1956 MODEL 11·4 H. P.**

For Excellent Performance Beauty & Comfort

Very Economical to Buy Run & Maintain

"FERGUSON" TRACTORS IMPLEMENTS Accessories & Spare Parts

THE FERGUSON SYSTEM of farm mechanisation meets more of the needs of more of the ryots than any other tractor

Authorised Dealers:

T. V. Sundram Iyengar & Sons Private Ltd.,

MADURAI

Branches: Tiruchirapalli, Tirunelveli, Pudukottai, Salem & Coimbatore